# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி — பகுதி - I (மதிப்பெண்கள் : 15) — மதிப்பெண்கள் : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

1. தமிழ்விடு தூது - இலக்கிய வகையைத் தேர்வு செய்க.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
3. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் - எருது கட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
4. <u>அழியா</u> வனப்பு <u>ஒழியா</u> வனப்பு சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத் தொகை ஈ) வினைத் தொகை
5. திமிலுடன் கூடிய காளை ஓவியம் காணப்பட்ட இடம் ______.
   அ) கரிக்கையூர் ஆ) மேட்டுப்பட்டி
   இ) சித்திரக்கல் புடவு ஈ) கோத்தகிரி
6. விடுபட்ட சொல்லை நிரப்புக :
   எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
   ______ பெருமை தரும்.
7. மிசை - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
8. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
   அ) தேசிய திறனறித் தேர்வு
   ஆ) ஊரகத் திறனறி தேர்வு
   இ) தேசிய திறனறி மற்றும் கல்வி உதவித் தொகை தேர்வு
   ஈ) தமிழக முதலமைச்சர் திறனாய்வுத் தேர்வு
9. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
10. தீரா இடும்பைத் தருவது எது?
    அ) ஆராயாமை - ஐயப்படுத்துதல் ஆ) குணம், குற்றம்
    இ) பெருமை, சிறுமை ஈ) நட்டாமை - பேராண்மை
11. சிப்பியும், நத்தையும் ______ உயிர்கள்.
    அ) ஓரறிவு ஆ) ஈரறிவு இ) மூவறிவு ஈ) நான்கறிவு

www.Padasalai.Net

*பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.*

நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே !
உண்டி முதற்றே உணவின் பிண்டம் ;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே ;

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள நூல் எது?
13. இப்பாடநூலின் ஆசிரியர் யார்?
14. பாடலில் உள்ள அடியெதுகையை எழுதுக.
15. யாக்கை - பொருள் தருக.

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4 x 2 = 8

**(21-ஆவது வினாவிற்கு மட்டும் கட்டாயமாக விடையளிக்கவும்)**

16. கூவல் என்று அழைக்கப்படுவது எது?
17. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
18. இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.
19. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
20. 'பழ மணல் மாற்றுமின், புது மணல் பரப்பு மின்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
21. "தரும்" என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 x 2 = 10

22. வல்லினம் மிகா இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.
23. விணையோடு வந்தாள், கிளியே பேசு - *தொடரின் வகையைச் சுட்டுக.*
24. ***அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக.***
    அ) உலகில் மூவாயிரம் மொழிகள் ________ (பேசு)
    ஆ) தவறுகளைத் ________. (திருத்து)
25. ***பொருள் எழுதுக :***
    அ) கந்தம் ஆ) விசனம்
26. ***பொருள் எழுதித் தொடர் அமைக்க.***
    அலை - அழை
27. ***கலைச்சொல் தருக :***
    அ) Conical stone ஆ) Tropical zone
28. ***உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக.***
    கயல்விழி உணவு சமைத்தாள் ; உண்டவர் அமுது போன்ற சுவையில் நீந்தினர்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு - 1

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2x3=6

29. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?
30. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.
31. தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதலவரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்யக் கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

   அ) போர் அறம் என்பது எவற்றைக் குறிக்கிறது?

   ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது?

   இ) போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

**(34-ஆவது வினாவிற்கு மட்டும் கட்டாயமாக விடையளிக்கவும்)**

32. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?
33. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
34. அ) ஒன்றறிவதுவே - எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

   *(அல்லது)*

   ஆ) தித்திக்கும் - எனத் தொடங்கும் பாடலை அடி மாறாமல் எழுதுக.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2x3=6

35. வல்லினம் மிகும் இடங்கள் நான்கினை எழுதி அவற்றுக்கான சான்றுகள் தருக.
36. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
37. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை - இக்குறட்பாவில் பயின்று வந்த அணியை விளக்குக.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5x5=25

38. அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்புகளை தொகுத்து எழுதுக.

   *(அல்லது)*

   ஆ) தூது அனுப்புத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

39. அ) உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழை நீரை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் வரைக.

   *(அல்லது)*


   ஆ) உங்கள் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள பொன்மொழிகளைத் தமிழில் மொழிபெயர்க்க.

1. The Nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi
2. The art of people is a true mirror to their minds. - Jawaharlal Nehru
3. The biggest problem is the lack of love and charity. - Mother Teresa
4. You have to dream before your dreams can come true. - APJ. Abdul Kalam
5. Winners don't do different things; They do things differently. - Shiv Khera

42. உங்கள் பெற்றோர் மகிழ்ச்சியடைய நீங்கள் செய்ய வேண்டிய செயல்களை வரிசைப்படுத்துக.

பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3 x 8 = 24

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விவரிக்க.

44. அ) "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

*(அல்லது)*

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. அ) சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

*(அல்லது)*

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டி தொகுப்புரை எழுதுக.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com